செய்தி வெளியீடு எண் :- 749 நாள் :- 12.12.12.

# இந்து சமய அறநிலையத்துறை,

## செய்தி குறிப்பு

இந்து சமய அறநிலையத்து மானியக் கோரிக்கையின்போது திருக்கோயில் பணியாளர்களுக்கு பக்தர்களிடம் மனித நேயத்துடத்துடன் பழகும் தன்மை குறித்து பயிற்சி அளிக்கப்படும் என மாண்புமிகு தமிழக முதல்வர் ஆணைப்படி இந்து சமய அறநிலைய்த்துறை அமைச்சர் அவர்களால் சட்டப்பேரவையில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. இவ்வறிப்பினை செயல்படுத்தும் விதமாக இன்று 12.12.2012 அன்று சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு மாதவபெருமாள் திருக்கோயில், திருவான்மியூர், அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில், மற்றும் நுங்கம்பாக்கம் அருள்மிகு அகத்தீஸ்வரர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் சென்னை நகரில் உள்ள திருக்கோயில் பணியாளர்களுக்கு மனித நேய பயிற்சி துவங்கப்பட்டு 12.12.2012 13.12.2012 மற்றும் 14.12.2012 ஆகிய மூன்று நாட்கள் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சியினை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.எம்.எஸ்.எம். ஆனந்தன் அவர்கள் துவக்கி வைத்தார். இந்து சமய அறநிலையத்துறை ஆணையர், திரு.ப.தனபால், சென்னை, இணை ஆணையர் திருமதி.ந.திருமகள், மயிலாப்பூர், அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் துணை ஆணையர்/ செயல் அலுவலர் திருமதி.த.காவேரி, வடபழனி, அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயில் துணை ஆணையர்/ செயல் அலுவலர் திரு.அ.இளம்பரிதி ஆகியோர் விழாவில் பங்கேற்றனர். இப்பயிற்சியில் சுமார் 150 திருக்கோயில் பணியாளர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சி வல்லுநர்களை கொண்டு நடத்தப்படுகிறது. இப்பயிற்சியில் திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களிடம் கனிவோடும், பணிவோடும் சேவை செய்வது குறித்து திருக்கோயில்களில் பணிபுரியும் அனைத்து நிலையிலான பணியாளர்களுக்கும் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

வெளியீடு, இயக்குநர்

செய்தி, மக்கள் தொடர்புத் துறை,

சென்னை-9